mismanagement of G.V.B. High School, Kanniservaipatti in Madurai district ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

மதுரை மாவட்டம், கன்னிசேர்வைப்பட்டி, G.V.B உயர்நிலைப் பள்ளியின் முறையற்ற நிர்வாகம்

திரு பி. ஆர், தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) மதுரை மாவட்டம் கன்னிசேர்வைப்பட்டியிலுள்ள G.V.B. உயர்நிலைப் பள்ளியின் முறையற்ற நிர்வாகம் குறித்து பொதுமக்களிட மிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் அரசுக்கு முறையீடுகள் வந்துள்ள னவா?

(இ) ஆமெனில் அதையொட்டி என்ன நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளியின் அங்கீகாரம் கல்வி ஆண்டு 1975–76 முதல் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: மதுரை மாவட்டத்தில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை தனியார் பள்ளிகளிலே தவறு செய்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது. அதே தருணத்திலே 27 ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாத ஊழியர்களும் எவ்வித இழப்பும் ஏற்படாது பணியில் அமர்த்தப்பட்டு இருப்பது பாராட்டவும் நன்றி தெரிவித்துக்கொள்ளவும் உரியது என்றாலும்கூட, அந்தப் பள்ளி மானியமாகப் பெற்றுள்ள தளவாடங்களை திரும்பப் பெற்று, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்குக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாம் மானியமாக ஏற் கெனவே கொடுதது அவைகள் இருக்குமானால், அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு வழி முறைகள் இருக்கின்றன. அதற்குத் தனியாக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*Z.K.M. High School, Bodinayakanur.*

* 13. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the for Education be pleased to state—

(*a*) whether any representation has been received during the beginning of 1975 from the Correspondent, Z.K.M. High School, Bodinayakanur, requesting the Government to accord permanent permission to admit girl pupils in their school ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

1975 அக்டோபர் 25]

## Z. K. M. உயர்நிலைப்பள்ளி, போடிநாயக்கனூர்

திரு ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போடிநாயக்கனூர், Z. K. M. உயர்நிலைப்பள்ளியில் பெண்களைச் சேர்த்துக்கொள்ள நிரந்தர அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டு, அப்பள்ளியின் தாளாளரிடமிருந்து 1975 ஆம் ஆண்டு தொடக்கத்தில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதையொட்டி என்ன நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) போடிநாயக்கனூர் ஜமீன்தாரணி காமுலம்மாள் நினைவுப்பள்ளியில் நிரந்தரமாக பெண்களைச் சேர்க்க அனுமதி வழங்குமாறு பள்ளித் தாளாளரிடமிருந்து 22-5-75 நாளன்று ஒரு கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது.

(இ) அது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆண்கள் பள்ளிகளில் பெண்கள் பகுதி இருப்பது பற்றி அரசு ஆணை ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றிய குறிப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எங்கெங்கு தனியாகப் பெண்கள் பள்ளி இருக்கின்றதோ அங்கேதான் பெண்கள் சேர்க்கப்படவேண்டும்; அங்கு இருக்கிற ஆண்கள் பள்ளியில் பெண்களைச் சேர்க்கக்கூடாது என்ற கொள்கையைத்தான் நாம் கடைப்பிடித்து வருகிறோம். சில இடங்களிலே, அவர்களுடைய கோர்ஸ் முடிகிற வரையிலே சில பள்ளிகளுக்கு அந்தந்த ஆண்டு தனித்தனியாக அனுமதி வழங்கி வருகிறோம். ஆனால் இந்தப் பள்ளியை பொறுத்த வரையில், அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று புதிதாக அங்கு துவக்கப்பட்டிருக்கிறது, அங்குதான் பெண்களைச் சேர்க்க வேண்டுமென்று இருந்தாலும், இந்தப் பள்ளியில் பெண்களைச் சேர்ப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் அனுமதி அளித்து வருகிறோம். ஆனால் இந்தப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் நிரந்தரமாகவே பெண்களைச் சேர்க்க அனுமதி தாருங்கள் என்று கேட்கிறார்கள். அது தருவதற்கு இல்லை. ஆனால் இப்பொழுது படிக்கிறவர்கள் படிப்பு முடிகிற காலம் வரையில், வேண்டுமானால் அனுமதி தரலாம் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: என்ன காரணம்பற்றி இந்த ஆண்கள் பள்ளியிலே பெண்கள் படிக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கக்கூடாது என்று அரசு கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்குமேயானால், அங்கு 11-வது வகுப்பு வரையிலே இரு சாராரும் சேர்ந்து படிக்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆனால், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி வேண்டும் என்று விரும்பிக் கேட்ட பிறகு,

பெரும்பாலோர் ஆண்கள் பள்ளியிலேயே படிக்கிற நிலைமை வந்து, அதனால் பெண்கள் பள்ளியில் 69, 70 பேர்தான் படிக்கிறார்கள் என்ற சூழ்நிலை வந்தால், அங்கு பெண்கள் பள்ளி வேண்டியதில்லை. இரண்டு பள்ளிகளிலுமே ஆண்கள், பெண்கள் என்று இரு சாராரையுமே சேர்த்து வைத்துக்கொள்ளலாம். மேலே நாடுகளில் உள்ளது மாதிரி இரு சாராருமே சேர்ந்து படிக்கலாம் என்ற முறையை நாம் கடைப்பிடிப்போமானால், பெண்களுக்கென்று தனி உயர்நிலைப்பள்ளி, தனிக் கல்லூரி இல்லாமல் இருப்பது நல்லது தான். ஆனால், நாடு அவ்வளவு சுலபத்திலே அதை வரவேற்கக் கூடிய நிலையில் இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மகளிர் பள்ளி, மாணவர் உயர்நிலைப்பள்ளி இருக்கின்ற இடங்களில் ஆடவர் உயர்நிலைப் பள்ளி என்று பெயர் வைத்துவிட்டால், இதிலே குழப்பங்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும் என்று சிலர் நினைக்கிறார்கள். அரசுக்கு அதுபற்றித் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாம் பாய்ஸ் ஸ்கூல், பாய்ஸ் போர்டு ஹைஸ்கூல், கேர்ல்ஸ் ஹைஸ்கூல் என்றுதான் சொல்லுறோம. சில இடங்களிலே பாய்ஸ், கேர்ல்ஸ் என்று பிராக்கட்டிலே போடுகிறோம். அந்த வகையிலேதான் இருக்கிறது. ஆனால் இரு சாராரும் படிக்கிற இடத்திலே பொதுவாகவே உயர்நிலைப் பள்ளி என்றுதான் அழைக்கிறோம்.

THIRU D. SANTOSZHAM : Mr. Deputy Chairman, there is a strong expert opinion that it is undesirable for boys and girls to study together during their adolescent age. Has this been considered by the Government and has any decision been taken in this matter ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதற்கான வாய்ப்பு அளிக்கின்ற முறையிலேதான் ஆங்காங்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, பெண்கள் கல்லூரி என்று நிறுவி வருகிறோம். யார் யார் அங்கு போய்ச் சேர்க்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு வாய்ப்புகளும் வசதிகளும் செய்து தருகிறோம். ஆண்கள் பள்ளியில் பெண்கள் படிக்கவே கூடாது என்று நாம் தடுத்து நிறுத்த முடியாது. எந்தப் பிள்ளைக்கு தைரியம் இருக்கிறதோ, எந்தப் பெற்றோர்களுக்கு தைரியம் இருக்கிறதோ அவர்கள் அங்கு போகலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: போடிநாயக்கனூர் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையிலே, உயர்நிலைப் பள்ளி என்ற அளவிலேதான் அவர்கள் அரசிடமிருந்து உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆண்கள் பள்ளி, பெண்கள் பள்ளி என்று தனித் தனியாகப் பெறவில்லை. அப்படி இருக்கும்போது, அங்கு பெண்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று சொல்வது அரசு ஆணைக்குப் பொருத்தமுடையதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அந்தப் பள்ளியில் 480 மாணவிகளுக்கு மேல் படிக்கிறார்கள். அவர்களுக்கென்றே தனியாக 12 செக்ஷன்கள் இருக்கின்றன. பெற்றோர்களே பல காரணங்களுக்காக

பெண்களை அங்கு படிக்கவைக்க விரும்புகிறார்கள். அப்படி இருக்கும் போது அவர்கள் படிப்பதற்கு வசதிகளும் வாய்ப்புகளும் செய்து கொடுக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்த ஊரிலும் முதலில் இரு சாராரும் சேர்ந்து படிக்கிற பள்ளிதான் இருந்து வரும். பிறகு பெண்களுக்கு என்று ஓர் உயர்நிலைப் பள்ளியை நாம் ஏற்படுத்துவோம். அப்படி ஏற்படுத்தும்போது அங்குதான் பெண்கள் படிக்க வேண்டும் என்று கூறுவதுதான் முறையாக இருக்கும். ஆனால் அங்கு தேவையில்லாமல், பெண்கள் பள்ளி வேண்டும் என்று கேட்டு, அனுவசியமாக ஓர் உயர்நிலைப் பள்ளியை வைத்து இந்த இடர்ப்பாடுகளை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. யாரும் வற்புறுத்தாமல் இருக்கும் இடத்தில் ஒரு பள்ளிதான் இருந்துவரும். இந்த முறையை நாம் கையாளா விட்டால், உயர்நிலைப் பள்ளிகள் செம்மையாக நடைபெறாது. பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்திவிட்டு, பின்னால் சரியாக நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கொள்கையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். ஆனால் சில இடங்களிலே பெண்கள் அங்கு போவதற்கு சிரமமாக இருக்கிறது; ஒரு மைல் தூரம் இருக்கிறது, பெண்களை அனுப்ப முடியவில்லை என்று பெற்றோர்கள் கூறுவார்களேயானால், அப்படிப்பட்ட இடங்களில் ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கிக்கொண்டு, ஆண்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற விதி இப்போதும் இருந்து வருகிறது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** இப்போது பெண்களுக்கு எல்லாம் தனி யாகப் பள்ளி உருவாகியிருக்கும் காரணத்தால், அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் பணி இழக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறதா? அவ்வாறு இருக்குமானல், அந்த ஆசிரியர்களைப் பணியில் அமர்த்த இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் நேற்றே குறிப்பிட்டேன். அப்படி பணியிழப்பு ஏற்படுமானல், புதிதாக ஏற்படுகின்ற பள்ளிகளிலே அவர்களை இடம் பெறச் செய்ய வேண்டும் அல்லது எங்கு அரசுப் பள்ளிகளில் காலி இடங்கள் இருக்கின்றனவோ அங்கு அவர்களை ஈர்த்துக்கொள்ளலாம் என்ற தெளிவான கொள் கையை நாம் வைத்திருக்கிறோம்.

**திரு. எல். பலராமன்:** இவ்வாண்டு பெண்கள் ஆண்டு என்ற முறையில் பெண்களும் ஆண்களும் ஒன்றாக இணைந்து படிப்பதற் கான ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வீட்டுக்குவீடு ஆண்களும் பெண்களும் சேர்ந்துதான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். பள்ளிகள், கல்லூரிகள் தனியாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. இது பெண்கள் ஆண்டு, பெண்களுக்கு எல்லாம் சம உரிமை தர வேண்டும் என்ற காரணத்தால், இந்த ஆண்டு பெண்களுக்கு

நூற்றுக்கு நூறு உரிமை கொடுத்துவிட்டு, பாதி உரிமையைத்தான் ஆண்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையிலேதான் இந்த ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கிறது.

*Non-Clinical Professors working in Medical Colleges*

* 14. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a number of Non-Clinical Professors working in Medical Colleges in the State have reached stagnation in their salary ; and

(*b*) if so, whether there is any proposal with the Government to revise their scale of pay ?

**மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவப் பணியாற்றாத பேராசிரியர்கள்.**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவப் பணியாற்றாத பேராசிரியர்கள் (Non-Clinical Professors) பலர் சம்பள வீத வகையில் தேக்க நிலையை (Stagnation) அடைந்துள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்களது சம்பள வீதத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம். (இ) இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இதுபோன்ற 'நான்-கிளினிகல் ப்ரொஃபசர்ஸ்' எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? இவர்களில் தேக்க நிலையில் உள்ளவர்கள் எவ்வளவு ஆண்டுக் காலமாக எவ்வளவு ஊதியம் பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கடந்த மார்ச் திங்கள் வரையில் 16 பேர் இந்த நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய ஊதியம் 1,300 ரூபாய். தேக்க நிலை எட்டுகிறவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை உயர்வு அளிக்கலாம் என்று அரசாங்கத்தாலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது ஆயிரம் ரூபாய் உச்ச ஊதியம் வருகிற அளவுதான் இந்த ஸ்டாக்னேஷன் (Stagnation) ஊதிய உயர்வு வழங்குவது என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இரண்டாவது, ப்ரொஃபசர் போன்ற பதவியிலே உள்ளவர்கள் இன்னும் பல பேர் இரண்டு ஆண்டுகளிலே இந்த நிலைக்கு வரக்கூடும். அப்படி வருகிறபோது, தனித் தனியாக ஸ்டாக்னேஷன், அதற்கு ஒரு விதிவிலக்கு, ஆயிரம் ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்களைப் பற்றிப் பரிசீலிப்பது என்பது இயலாத காரியம்.